Reg.No : | | | | | | | | | | | |

தனபாக்கியம் கிருஷ்ணசாமி முதலியார் மகளிர் கல்லூரி, வேலூர்-1

(தன்னாட்சி)

பருவமுறைத் தேர்வுகள்

ஏப்ரல் - 2016 **15CTA2A**

இக்கால இலக்கியம் - II

நேரம் : 3 மணி **மதிப்பெண்: 75**

பகுதி – அ (10 X 2 =20)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பத்தி அளவில் விடை தருக.

1. இருள் தன் கட்டுக்குலைந்தது எங்ஙனம்?
2. தவமிருக்கும் குளத்துக்குள் மலர்ந்த ஒற்றைப் பூ எது?
3. 'அன்பு வாழ்க்கை' தலைப்பில் நக்கீரர் எதனுடைய அன்பு வாழ்வை தன் பாட்டில் விளக்கியுள்ளார்?
4. செல்வம், இளமை, யாக்கை மற்றும் நிலையாமை பற்றி எடுத்துரைக்கும் நீதி நூல் எது?
5. வேடர் திலகன் யார்?
6. இராமயணத்தை சிருஷ்டித்தவர் யார்?
7. 'உப்பு வயல்' நாவலின் மையப் பாத்திரத்தின் பெயர் என்ன?
8. 'உப்பு வயல்' நாவல் எந்த மக்களின் வாழ்க்கை அவலத்தை எடுத்துக்காட்டுகிறது?
9. முருகதாசர் வீட்டுச் சொந்தக்காரன் குடியிருக்க வருபவர்களை எப்படி நினைத்துக் கொள்வான் என்கிறார்?
10. 'மதுரைக்கு வழி வாயிலே' என்றவர் யார்?

பகுதி – ஆ (5 X 5 =25)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

11. முதியோர் காதலை குடும்பவிளக்கின் வழி விளக்குக.
12. ஹைக்கூ சிறுகுறிப்பு வரைக.
13. 'இயற்கையின் உறவு' குறித்தெழுதுக.
14. 'இன்னாது அம்மமிவ் உலகம்' என்று மு.வ. கூறுவதை விளக்குக.
15. இராவணனும் அக்னிதேவனும் சந்தித்து உரையாடியதை எழுதுக.
16. உப்பு வயல் நாவலின் கதைக்கருவினை எழுதுக.
17. புதுமைப்பித்தனின் 'தெரு விளக்கு' கதையைக் கூறுக.
18. 'நினைவுப் பாதை' கூறும் கருத்தை விவரி.

பகுதி – இ (3 X 10 =30)

கீழ்காணும் வினாக்களுக்கு விரிவான விடை தருக.

19. அ) 'ஒரு நாள் நிகழ்ச்சியை' பாரதிதாசனின் குடும்பவிளக்கின் வழி விளக்குக?

(அல்லது)

ஆ) ஆரிசனின் ஹைக்கூ கவிதைகளைப் பற்றி விவரி.

20. அ) மழையைக் குறித்து 'அதே மழை' என்ற கட்டுரையில் மு.வ. கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

ஆ) 'நீதிதேவன் மயக்கம்' என்ற நாடகத்தின் வழி அறமன்றத்தில் புனர்விசாரணையாக எடுத்துக் கொள்ளப்பட்ட இராவணன் வழக்கை இராவணனே எடுத்து நடத்திய பாங்கை விவரி.

21. அ) 'உப்பு வயல்' ஒரு நல்ல யதார்த்த நாவல் எங்ஙனம் என்பதை விவரி.

(அல்லது)

ஆ) 'சாபவிமோசனம்' கதையினை விளக்குக.

*** * * * * * ***